மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதாவது நல நிதி என்று கேள்வி போட்டுவிட்டு, என்னென்ன திட்டங்கள் என்று இப்போது கேட்பதால்தான், தனிக் கேள்வி போடுமாறு அமைச்சர் சொல்கிறார்.

வினா எண் 256, திரு. ஏ. கே. சி. சுந்தரவேல், மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர்.

256—

நாட்ராம்பள்ளி அம்பலூரில் கூட்டுறவுத் துறையில் பிரதம நிலவள வங்கி தொடங்குதல்.

* **21916**—*திரு. ஏ. கே. சி. சுந்தரவேல் :*

மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வட ஆற்காடு—அம்பேத்கார் மாவட்டம், நாட்ராம்பள்ளி ஒன்றியம், அம்பலூரில் கூட்டுறவுத் துறையில் பிரதம நிலவள வங்கி (L.D.Bank) ஏற்படுத்தப்படுமா ?

மாண்புமிகு திரு. கா. ப. பட்டாபிராமன், கூட்டுறவுத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

வட ஆற்காடு—அம்பேத்கார் மாவட்டம், நாட்ராம்பள்ளி ஒன்றியம், அம்பலூரில் ஒரு புதிய கூட்டுறவு நிலவள வங்கியைத் துவக்குவதற்கான சாத்தியக் கூறுகள் ஏதும் இல்லை.

திரு. ஏ. கே. சி. சுந்தரவேல் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மிகவும் நலிவுற்ற விவசாயிகள் மற்றும் நலிந்துள்ள, பின்தங்கியுள்ள மக்கள் நிறைந்த பகுதியாக உள்ள நாட்ராம்பள்ளி ஒன்றியம், ஒருகாலத்தில் தீவிரவாதிகளின் வளர்ச்சிக்கு இடம் கொடுத்துவிட்டது. அதனை முற்றிலும் ஒழித்துக்கட்டிய மாண்புமிகு இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் நல்லாட்சியில், அங்கு ஒரு நிலவள வங்கியைத் துவக்க ஆவன செய்வார்களா என்பதையும், வடாற்காடு–அம்பேத்கார் மாவட்டத்தில் மொத்தம் எத்தனை நிலவள வங்கிகள் உள்ளன என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. ப. பட்டாபிராமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு பகுதியில், ஒரு நிலவள வங்கியைத் துவக்க வேண்டுமென்று சொன்னால், அதற்குப் பல்வேறுபட்ட நிபந்தனைகள் உள்ளன. 'நாபார்டு' நிறுவனத்திடமிருந்து அனுமதி பெறவேண்டும்.

அப்படி அனுமதி பெறுகிற நேரத்தில், துவக்கப்பட இருக்கிற அந்த நிலவள வங்கியில் கடனாளிகள் மற்றும் பயனாளிகள் எத்தனைப் பேர் இருப்பார்கள்; அங்கே எவ்வளவு 'லேவாதேவி' இருக்கும்; அவர்களுக்குக் கடன் தரக்கூடிய வசதிகள் எல்லாம் இருக்கின்றனவா; ஏற்கெனவே இருக்கிற நிலவள வங்கியானது, துவக்கப்பட இருக்கிற நிலவள வங்கியின் காரணமாக பாதிக்குமா என்பன போன்ற நிபந்தனைகள் எல்லாம் இருக்கின்றன. ஆகவே, இந்த அடிப்படைகளின் காரணமாகத்தான், அவர் கேட்கிற அந்தப் பகுதியில், நிலவள வங்கியைத் துவக்குவதற்கு வசதிகள் இல்லை என்று நான் சொன்னேன். வடாற்காடு—அம்பேத்கார் மாவட்டத்தில் மொத்தம் 9 நிலவள வங்கிகள் உள்ளன. அரக்கோணம், ஆம்பூர், குடியாத்தம், கந்தளி, கே. வி. குப்பம், நெமிலி, திருப்பத்தூர், வேலூர் மற்றும் வாலாஜா ஆகிய இடங்களில், 9 நிலவள வங்கிகள் இருக்கின்றன என்பதை அறிவிக்கிறேன்.

திரு. ஏ. கே. சி. சுந்தரவேல் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பத்தூர் நிலவள வங்கியில், கடந்த மூன்று ஆண்டுகளில் எத்தனைப் பேருக்கு எவ்வளவு கடன்கள் வழங்கப்படுள்ளன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. ப. பட்டாபிராமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பத்தூர், நிலவள வங்கியில், கடந்த 3 ஆண்டுகளில் கொடுக்கப்பட்ட கடன் தொகை எவ்வளவு என்று கேட்டிருக்கிறார். 1991-92 -இல், 174 பயனாளிகளுக்கு ரூ. 20.77 இலட்சமும், 1992-93-இல், 173 பயனாளிகளுக்கு ரூ. 31.40 இலட்சமும், 1993-94-இல், 127 பயனாளிகளுக்கு ரூ. 30.39 இலட்சமும், ஆக மொத்தம் ரூ. 82.56 இலட்சத்திலே, 474 பேர், பயனாளிகளாகப் பயன் பெற்றிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 257, திரு. எம். கே. சுந்தரம், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

257—

திருவண்ணாமலை ஒன்றியத்தைப் பிரிக்கும் திட்டம்.

* 21042—**திரு. எம். கே. சுந்தரம் :**

மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவண்ணாமலை ஒன்றியம் அதிகமாக ஊராட்சிகளை உள்ளடக்கியுள்ளதால், நிர்வாக வசதிக்காக அதனைப் பிரிக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?